முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் AA2 பரீட்சை – 2015 யூலை

## (AA24) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

02-08-2015
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

பக்கங்கள் : 12
வினாக்கள் : 10

(1) ***நேரம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.***

(3) *உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில்* ***நீர் விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல எழுத்து வேலைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். எடுகோள்கள் ஏதாவது மேற்கொண்டிருப்பின் அதனைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயற்பாட்டு வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயற்பாட்டு வினைச் சொல்லினைக் (OTQ's தவிர்ந்த) கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயற்பாட்டு வினைச்சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இலக்கம்* ***1.1*** *தொடக்கம்* ***1.9*** *வரையிலான வினாக்களுக்காக மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து தேர்வு செய்த விடைகளின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் வினாக்களுக்குரிய இலக்கத்துடன் குறிப்பிட்டு எழுதவும்.*

**1.1** இலங்கையில் எழும் அல்லது பெறப்பட்ட ஆதாயம் மற்றும் வருவாய் கீழே குறிப்பிடப்படும் ஆதாயம், வருவாய் ஆகியவற்றை உள்ளடக்கும் :

(1) இலங்கையில் வழங்கப்பட்ட சேவைகளின் பொருட்டு பெறப்பட்டது.

(2) இலங்கையில் உள்ள ஆதனங்களிலிருந்து பெறப்படும் ஆதாயம், வருவாய்

(3) இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வியாபாரத்திலிருந்து பெறப்படும் ஆதாயம் வருவாய்.

(4) மேற்கூறப்பட்ட யாவற்றிலிருந்தும் பெறப்படும் வருவாய் ஆதாயம் (02 புள்ளிகள்)

**1.2** 2013/14 இறை மதிப்பீட்டு ஆண்டிற்கான **சில்வாவின்** வரி அறவிடப்படும் வருவாய் ரூ.1,200,000/- ஆகும். குறித்த மதிப்பீட்டு ஆண்டிற்காக செலுத்த வேண்டிய வருமானவரித் தொகை :

(1) ரூ. 10,500/-. (2) ரூ. 84,000/-.

(3) ரூ. 36,000/-. (4) ரூ. 28,000/-. (02 புள்ளிகள்)

**1.3** 2013/14 இறைமதிப்பீட்டு ஆண்டு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது **தவறானது**,

(1) அலகு நம்பிக்கை நிறுவனத்தின் (Unit trust) அலகு உரிமையாளருக்கு வழங்கப்பட்ட பங்கு இலாபத்திற்கு இறைவரியிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) எந்த மதிப்பீட்டு ஆண்டிலும் 183 நாட்கள் அல்லது அதற்குக் கூடுதலாக ஒரு தனிநபர் இலங்கையில் பௌதிகமாக பிரசன்னமாக இருந்தால் அந்த மதிப்பீட்டு ஆண்டு பூராவும் நாட்டின் வதிவிடவாளராகக் கருதப்படுவார்.

(3) ஒரு தனிநபரின் வரி மதிப்பீட்டு வருவாய் ரூ. 1,500,000/- இற்கு அதிகமானால் அவரின் வட்டி வருமானம் 8% வீத நிறுத்திவைத்த வரிக்கு உள்ளாகும்.

(4) மேற்கூறப்பட்ட ஏதுமல்ல. (02 புள்ளிகள்)

**1.4** **பெர்னாந்து** ஒரு தனியார் நிறுவன ஊழியராவார். அவர் மாத வேதனமாக ரூ. 50,000/- பெறுவதுடன் கொழும்பில் வாடகையற்ற வதிவிடமொன்றும் பெற்றுள்ளார். அந்த வீட்டின் தேறிய ஆண்டுப் பெறுமதி ரூ. 45,000/- ஆகும். அதன் சோலைவரியான 30% கம்பனியால் செலுத்தப்பட்டது.

அவரின் தொழில்சார் வருவாயுடன் சேர்க்கப்பட வேண்டிய வாடகைப் பெறுமதியானது :

(1) ரூ. 78,000/-. (2) ரூ. 45,000/-.

(3) ரூ. 60,000/-. (4) ரூ. 50,000/-. (02 புள்ளிகள்)

**1.5**

**(a)** கம்பனிக்கு உரிமையான மின்பிறப்பாக்கி, ஆனால் பிரதான நிறைவேற்று அதிகாரியின் வதிவிடத்தில் பிரயோகிக்கப்படுகின்றது.

**(b)** ஊழியர்கள் அவர்களின் வதிவிடத்திலிருந்து அலுவலகத்திற்குப் பயணிப்பதற்கு கம்பனியினால் பிரயோகிக்கப்படும் மோட்டார் கோர்ச்.

**(c)** தொழிற்சாலையின் பிரயோகத்திற்காக கொள்முதல் செய்த ரூ. 100,000/- பெறுமதியான கருவிகள்.

**(d)** உரிமையாளரால் வியாபாரத் தேவைக்காக மட்டும் பிரயோகிக்கப்படும் மோட்டார் வண்டி.

மேலுள்ளவற்றுள் எது தேய்மான விடுதொகைக்கு (depreciation allowance) தகுதிபெறும்?

(1) **(a)** மற்றும் **(c)** மட்டும். (2) **(b)** மற்றும் **(d)** மட்டும்.

(3) **(b)** மட்டும். (4) மேற்கூறிய ஏதுமல்ல. (02 புள்ளிகள்)

**1.6** 2011/12 இறைவரிமதிப்பாண்டு தொடக்கம் ஐந்து வருட காலத்திற்கு **சண் றே PLC** நிறுவனத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 2014 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் புரள்வுத் தொகை ரூ. 75,000,000/- ஆகும்.

பொருளாதாரச் சேவை அறவீடு (ESC) தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?

(1) செலுத்தப்பட வேண்டிய பொருளாதாரச் சேவை அறவீடு ரூ. 625,000/-.

(2) செலுத்தப்பட வேண்டிய பொருளாதாரச் சேவை அறவீடு ரூ.375,000/-.

(3) செலுத்தப்பட வேண்டிய பொருளாதாரச் சேவை அறவீடு ரூ.187,500/-.

(4) கம்பனி பொருளாதாரச் சேவை அறவீட்டுக்கு உள்ளாகாது. (02 புள்ளிகள்)

**1.7** ஒரு பங்குடமை தொடர்பாக பின்வருவனவற்றுள் எது சரியானது?

(1) ஒரு பங்குடமை ஆண்டுத் தொகைக் கொடுப்பனவு, நில வாடகை, வேத்துரிமைப் பணம் (royalty) அல்லது வட்டி ஆகிய கொடுப்பனவுகளை அதன் பகிரத்தக்க இலாபத்தினைக் கணிப்பதில் கழிப்பதற்கு உரித்துடையதல்ல.

(2) எந்தவொரு வரி மதிப்பீட்டு வருடத்திலும் பகிரத்தக்க நட்டம் ஒன்று இருக்குமானால் அந்த நட்டத்தை பங்குடமையின் ஏனைய வருவாய்க்கு எதிராக பதிலீடு செய்ய இயலும்.

(3) ஒரு பங்குடமையில் ஒரு வாழ்க்கைத்துணை பங்காளியாக இருக்கும்போது அவரின் மற்ற வாழ்க்கைத்துணை பங்குடமைக்கு வழங்கிய சேவையின் பொருட்டு வருமான த்தைப் பெற்றால் அவ்வருமானம் அவ் ஒரு வாழ்க்கைத்துணையின் வருவாயாகக் கொள்ளப் படும்.

(4) பங்குடமை வரியானது பகிரப்படும் இலாபம் மற்றும் ஏனைய வருவாயில் 10% விகிதத்தில் செலுத்தப்பட வேண்டும். (02 புள்ளிகள்)

**1.8** ஐம்பது வயதுடைய **சுமதிபால** என்பவர் ஒரு வர்த்தக வங்கியில் வருடத்திற்கு 10% விகிதத்தில் ரூ. 5,000,000/- ஐ வைப்புச் செய்துள்ளார். அவர் தனது வரிமதிப்பு வருமானம் ரூ.1,200,000/- என வங்கிக்குத் தெரிவித்துள்ளார். வட்டி வருமானத்தில் நிறுத்திவைத்தல் வரியாக (WHT) வங்கியினால் கழிக்க வேண்டிய தொகை :

(1) ரூ. 50,000/-. (2) ரூ. 12,500/-.

(3) ரூ. 25,000/-. (4) ரூ. 100,000/-.

(02 புள்ளிகள்)

**1.9** பின்காணப்படும் இடைவெளியை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தேர்வு செய்யவும் :

"ஏதேனும் வரிமதிப்பாண்டு ஒன்றிற்கு இறைவரி செலுத்த வேண்டிய ஒவ்வொரு தனிநபரும் அந்த வரி மதிப்பீட்டு ஆண்டின் பூர்த்தியைத் தொடர்ந்து வரும் ............................... அன்றோ, அதற்கு முன்னரோ வருமான விபரத்திரட்டொன்றைச் சமர்ப்பிக்குமாறு (Returns) தேவைப்படுத்தப்படுகின்றார்."

(1) நவெம்பர் 30. (2) செம்ரெம்பர் 30.

(3) ஒக்ரோபர் 31. (4) மார்ச் 31. (02 புள்ளிகள்)

**1.10** பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியானதா, தவறானதா என்று குறிப்பிடுக. தேர்ந்த (சரி / தவறு) என்ற உங்கள் விடையை உங்கள் விடைப்புத்தகத்தில் வினாவிற்கு ஒதுக்கப் பட்ட இலக்கத்தைக் குறிப்பிட்டு எழுதுக.

(1) வாடகை வருமானத்திலிருந்து சோலைவரி மற்றும் திருத்தச் செலவுகள் வரையறை யின்றி கழிக்கப்படலாம்.

(2) அதிஸ்டலாபப் பரிசாகப் பெறப்பட்ட தொகை ரூ. 500,000/- க்கு குறைவானதாக இருந்தால் ஒருவரால் இறைவரி செலுத்துவது தேவைப்படுத்தப் படவில்லை.

(3) பெற்றார்களின் விவாகம் நிலைத்திருக்குமானால் (subsists) ஒரு வதிவுள்ள நபரின் (resident person) பிள்ளையின் வருமானம் அவரின் தந்தையின் வருமானத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும்.

(4) தவறான வருமான விபரத்திரட்டை சமர்ப்பிப்பதற்கான தண்டப்பணமாக ரூ.20,000/- க்கு விஞ்சாத தொகையையே விதிக்க முடியும். (02 புள்ளிகள்)

*பகுதி A முடிவுற்றது*

## <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**(வரை) செயா பெஷன்ஸ் (தனி) நிறுவனம்** 2013 ஏப்ரல் 01 இல் கூட்டமைக்கப்பட்டு ஆடைகளை ஏற்றுமதி செய்யும் வியாபாரத்தில் ஈடுபடும் நிறுவனமாகும்.

இவ்வருடத்தில் கையகப்படுத்தப்பட்ட மூலதனச் சொத்துகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) அலுவலக கட்டடம் இவ்வருடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. அதன் நிர்மாணக் கிரயம் ரூ.1,250,000/-.

(2) வருடத்தில் கம்பனி ரூ. 350,000/- கிரயத்திற்கு கணினி இயந்திரங்களை கொள்வனவு செய்ததுடன் உள்நாட்டில் உற்பத்தி செய்த மென்பொருள் முறைமையையும் ரூ. 140,000/- கிரயத்தில் கொள்வனவு செய்தது. மேலும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட மென்பொருள் முறைமையையும் ரூ. 100,000/- க்கு கொள்வனவு செய்தது.

(3) மூன்று உயர் நுட்பத் (high-tech) தையல் இயந்திரங்கள் ரூ.1,800,000/- கிரயத்தில் கொள்வனவு செய்தது.

(4) 2013 மே மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 24 மாதங்களுக்கான நிதிக் குத்தகை உடன்படிக்கையின் கீழ் ஒரு நிழற்பட நகல் இயந்திரம் பெறப்பட்டது. இக்குத்தகையின் கீழ் செலுத்த வேண்டிய மாத தவணைப் பணம் ரூ. 12,000/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரித் தேவைக்கான தேய்மான விடுதொகையை (depreciation allowance) மதிப்பீடு செய்வதுடன் ஏதாவது ஒரு சொத்திற்குத் தேய்மான விடுதொகை கோருவதற்கு உரித்து இல்லாவிடின் அதன் காரணத்தையும் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

## வினா 03

**மாலியத்த** என்பவர் ஒரு வதிவுள்ளவரும் ஒரு தனியார் நிறுவனத்தின் நிறைவேற்று அலுவலரும் ஆவார். அவரின் தொழில் வருமானம் தொடர்பான 2013/14 வரிமதிப்பாண்டிற்கான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

(1) அவரின் மாத வேதனம் ரூ. 120,000/-. அதற்கு மேலாக பிரயாணப் படியாக மாதாந்தம் ரூ.40,000/- செலுத்தப்பட்டது. அவரின் மருத்துவச் செலவுத் தொகை ரூ. 85,500/- உம் தனியார் தொலைபேசிச் சிட்டைத் தொகை ரூ. 64,500/- உம் வரிமதிப்பாண்டு 2013/14 காலப் பகுதியில் கம்பனி மீளளிப்புச் செய்தது.

(2) 2013 ஏப்ரல் மாதத்தில் போனஸ் கொடுப்பனவாக ரூ. 360,000/- 2012/13 வருட இலாபத்தின் அடிப்படையில் பெற்றுக் கொண்டார்.

(3) இவ்வருடத்தில் பழைய இருப்புகள் தொடர்பான விற்பனை ஒழுங்குகளுக்காக கம்பனி தரகுப்பணமாக ரூ. 50,000/- ஐக் கொடுப்பனவு செய்தது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2013/14 வருடத்திற்கான **மாலியத்தவின்** ஊழியத்திலிருந்து பெறப்பட்ட நியதிச்சட்ட வருமானத்தை (statutory income) மதிப்பீடு செய்வதுடன் ஏதாவது பெறுவனவு வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்கப் பட்டதாக கருதப்பட்டிருந்தால் அதற்கான காரணங்களையும் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

## வினா 04

**(வரை) சூரியா (தனி) கம்பனியானது** இலங்கையில் கூட்டமைக்கப்பட்டது. 2012/13 வரிமதிப்பாண்டிற்காக கம்பனியால் செலுத்தப்பட வேண்டிய வருமான வரி ரூ. 1,400,000/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

(a) சுயமதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2013/14 மதிப்பீட்டு ஆண்டிற்காக வருமான வரி செலுத்த வேண்டிய திகதிகளை அடையாளம் காணுதல்

(b) தண்டப்பண அறவீட்டைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு காலாண்டிலும் செலுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த வரித் தொகையைக் **குறிப்பிடுக**.

*(2013/14 வரிமதிப்பாண்டிற்கான கொடுப்பனவு செய்ய வேண்டிய வரி ரூ.1,400,000/- ஐ விட அதிகமாக இருக்கும் என்று கருதவும்.)*

(05 புள்ளிகள்)

## வினா 05

எழுதுகருவிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள வதிவுள்ள கம்பனியான **(தனி) பிசி பீஸ்** நிறுவனத்தின் பதிவுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலாண்டிற்கான தகவல்கள் பினவருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| விற்பனைகள் | 5,670,000 |
| மூலப்பொருள் கொள்வனவின் மீது தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) | 23,800 |
| பேணல் செலவுகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 18,000 |
| மாத தவணைப்பணமாகச் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 60,000 |
| முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உள்ளீட்டு மீதி | 12,000 |

***நீங்கள் செய்ய வேண்டியது :***

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) மீதியை மதிப்பிடுதல் (05 புள்ளிகள்)

## வினா 06

பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் பிரகாரம் பொருட்கள் தொடர்பான 'வழங்கற் காலம்' (time of supply) என்பதின் கருத்தினைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

*பகுதி B நிறைவுற்றது*

# <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

சித்திர வடிவமைப்பு டிப்ளோமா கற்கையைப் பூர்த்தி செய்த பின் 2013 மே 01 இல் **சமன்** என்பவர் தனது சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தார். 2013 மே 01 ஆம் திகதி ரூ. 60,000/- ஐ ஒரு முழுத் தொகையாகவும் வழங்கி மாதக் கொடுப்பனவாக ரூ. 15,000/- ஐ வழங்கும் அடிப்படையில் 05 வருடங்களுக்கு இயங்கும் குத்தகை உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார். அவர் பின்வரும் வருமானக் கூற்றை 2014 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கு தயாரித்துள்ளார்.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| **வருமானம் :** | | |
| மொத்த வருமானம் | | 1,120,000 |
| சேமிப்புக் கணக்கில் வட்டி வருமானம் | | 3,650 |
| மொத்த வருமானம் | | 1,123,650 |
| **கழி : செலவுகள்** | | |
| ஒரு வருடத்திற்கு செலுத்திய வாடகை | 180,000 | |
| வாடகை – தொகைக் கொடுப்பனவு | 60,000 | |
| கணினி ஒன்று கொள்வனவு | 150,000 | |
| இறக்குமதி செய்த மென்பொருள் கொள்வனவு | 25,000 | |
| மின்சாரம், அலுவலக பேணல் | 15,000 | |
| குத்தகை உடன்படிக்கை மீதான முத்திரைச் செலவு | 9,000 | |
| அன்பளிப்பு | 3,000 | 442,000 |
| **தேறிய இலாபம்** | | **681,650** |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2013/14 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான வரித் தேவைக்காக வியாபார நிறுவனத்தின் நியதிச் சட்ட வருமானத்தை (இலாபம் அல்லது நட்டம்) மதிப்பிடுதல் (10 புள்ளிகள்)

## வினா 08

2013/14 வரிமதிப்பாண்டில் ஒரு தனியார் கம்பனி ஊழியரான திரு. **பெரேரா** அவர்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு :

(1) அவர் மாத வேதனமாக ரூ. 120,000/- மற்றும் வருடத்திற்கான விருந்தோம்பல் படியாக ரூ.240,000/- பெற்றுள்ளார். வாகனம் ஒன்றிற்குப் பதிலாக மாதாந்த விடுதொகையாக ரூ.70,000/- அவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(2) சோலைவரிக்கு ரூ. 120,000/- க்கு மதிப்பிடப்பட்ட அவரது வீட்டை மாத வாடகை ரூ.24,000/- க்கு வழங்கியுள்ளார். அவர் கம்பனியால் வழங்கப்பட்ட வீடொன்றில் குடும்பத் துடன் வாழ்கின்றார். கம்பனி அவ்வீட்டிற்கு மாத வாடகையாக ரூ. 30,000/- செலுத்துகின்றது. சோலைவரி கம்பனியினால் செலுத்தப்பட்டது. வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ.80,000/- ஆகும்.

(3) இரு வீடுகளுக்கான சோலைவரி 30% செலுத்தப்பட்டது.

(4) தேசிய அதிஸ்டலாபச்சீட்டுப் பரிசாக ரூ. 500,000/- பெற்றுள்ளார். அதற்கான நிறுத்தி வைக்கப்பட்ட வரியாக ரூ. 50,000/- கழிக்கப்பட்டிருந்தது.

(5) இலங்கை வங்கியில் பெற்ற வீடமைப்புக் கடன் வட்டியாக ரூ. 125,000/- செலுத்தப்பட்டது. மூலதன மீள்கொடுப்பனவு ரூ. 54,000/- ஆகும்.

(6) நிறுவனமயப்படுத்தப்பட்ட அனுமதிக்கப்பட்ட தரும நிறுவனமான புற்றுநோய் சங்கத்திற்கு ரூ.50,000/- அன்பளிப்புச் செய்ததுடன் ஆயுட் காப்புறுதித் தவணைப் பணமாக ரூ. 86,000/- செலுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2013/14 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கான வரிவிதிக்கத்தக்க (Taxable) வருமானத்தை மதிப்பிடுதல்
(10 புள்ளிகள்)

## வினா 09

**திருமதி. பெரேரா** இளைப்பாறிய பின் தனது நண்பி **திருமதி. பொன்சேகாவுடன்** இணைந்து ஒரு மலர்த் தோட்டத்தை பங்குடமை வியாபாரமாக ஆரம்பித்துள்ளார். அவர்கள் இலாப-நட்டத்தை 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்கிறார்கள். 2014 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாபமாக ரூ. 1,274,000/- பெறப்பட்டதாக பங்குடமைக் கணக்கு வெளிப்படுத்தியது. இது பின்வரும் செலவுகளை கழித்த பின் பெறப்பட்டதாகும் :

(1) பங்காளருக்கு வழங்கிய சம்பளம் - **திருமதி. பெரேரா** ரூ. 240,000/-
- **திருமதி. பொன்சேகா** ரூ. 180,000/-

(2) கணக்குத் தயாரிப்பதற்கு **திருமதி. பொன்சேகாவின்** மகளுக்கு வழங்கியது ரூ. 18,000/-.

(3) வியாபாரம் நடாத்தும் வளவு **திருமதி. பெரேராவுக்கு** உரிமையானது. மாத வாடகையாக ரூ.12,000/- செலுத்தப்பட்டது.

(4) மூலதனச் சொத்துக்களின் மீதான தேய்மானம் ரூ.25,000/-. நடப்பு வரிமதிப்பீட்டு ஆண்டிற்கான தேய்மான விடுதொகை எதுவும் கிடையாது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2013/14 வரிமதிப்பாண்டு தொடர்பாக பின்வருவனவற்றை மதிப்பீடு செய்தல் :

(a) பங்குடமையின் பகிரத்தக்க இலாபம்

(b) பங்குடமையின் வருமான வரிப் பொறுப்பு

(c) ஒவ்வொரு பங்காளியினதும் வியாபாரம் மூலமான வருமானம் (10 புள்ளிகள்)

*பகுதி C முடிவுற்றது*

# <u>பகுதி D</u>

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

ஐரோப்பிய சந்தைக்கு மென்மை விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனியான **லிற்றில் ஸ்டார் (தனி) கம்பனியின்** நிதிக் கூற்றுக் களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 2014 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான தகவல்கள் பின்வருமாறு :

**முற்றடக்க வருமானக் கூற்று**
**2014 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது**

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| புரள்வு – ஏற்றுமதி மூலம் | | 28,080,000 |
| விற்பனையின் கிரயம் | | (16,848,000) |
| **மொத்த இலாபம்** | | **11,232,000** |
| **கூட்டு : வேறு வருமானம்** | | |
| இயந்திர விற்பனை மூலம் பெற்ற இலாபம் | | 120,000 |
| வட்டி வருமானம் -10% நிறுத்திவைத்த வரி கழித்து | | 67,500 |
| | | 11,419,500 |
| கழி : செலவுகள் | | |
| நிர்வாகச் செலவுகள் (குறிப்பு 1) | 2,810,825 | |
| விற்பனை விநியோகச் செலவுகள் (குறிப்பு 2) | 372,125 | |
| நிதி மற்றும் ஏனைய செலவுகள் (குறிப்பு 3) | 23,700 | (3,206,650) |
| **வரிக்கு முன்னரான தேறிய இலாபம்** | | **8,212,850** |

**<u>குறிப்பு 1 – நிர்வாகச் செலவுகள் :</u>**

| | ரூ. |
|---|---|
| சம்பளமும் கூலிகளும் | 1,461,800 |
| ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதி | 174,270 |
| தொழிலாளர் நலன் (குறிப்பு 1.1) | 38,000 |
| இளைப்பாற்று நன்கொடை ஏற்பாடு (குறிப்பு 1.2) | 84,755 |
| தேய்மானம் | 688,000 |
| மின்சாரம் மற்றும் தொலைபேசி | 136,000 |
| உள்நாட்டுப் பிரயாணங்கள் | 44,000 |
| சட்ட கட்டணங்கள் (குறிப்பு 1.3) | 12,000 |
| அன்பளிப்புகள் (குறிப்பு 1.4) | 125,000 |
| முத்திரை வரி (குறிப்பு 1.5) | 30,500 |
| திருத்தம் பேணல் | 16,500 |
| | **2,810,825** |

**குறிப்பு 1.1 – ஊழியர் நலன் செலவுகள் :**

ஊழியர் நலன் செலவுகள் ஊழியரின் ஆண்டு ஒன்றுகூடல் தொடர்பாக ஏற்பட்ட செலவுத் தொகையான ரூ. 25,000/- உள்ளடக்கியுள்ளது.

**குறிப்பு 1.2 - இளைப்பாற்று நன்கொடை ஏற்பாடு :**

| | **ரூ.** |
|---|---|
| 2013 ஏப்ரல் 01 இல் ஆரம்ப மீதி | 244,500 |
| வருடத்தில் ஏற்படுத்திய ஏற்பாடு | 84,755 |
| வருடத்தில் செய்த கொடுப்பனவு | (54,000) |
| 2014 மார்ச் 31 இறுதி மீதி | **275,255** |

**குறிப்பு 1.3 – சட்ட கட்டணங்கள் (Legal Fees):**

அறவிடமுடியாக் கடனைப் பெறுவதற்கு ஏற்பட்ட சட்டச் செலவு ரூ. 12,000/-.

**குறிப்பு 1.4 – அன்பளிப்புகள் :**

வருடத்தில் கம்பனி அரசாங்கத்திற்கு ரூ. 100,000/- அன்பளிப்பாக வழங்கியதுடன் அனுமதிக்கப்பட்ட தருமஸ்தாபனமான வயோதிப இல்லத்திற்கு ரூ. 25,000/- பெறுமதியான பொருட்கள் அன்பளிப்புச் செய்தது.

**குறிப்பு 1.5 – முத்திரை வரி :**

வருடத்தில் கம்பனி 100,000 புதிய பங்குகள் வழங்கியதுடன் பங்கு வழங்கல் தொடர்பாக செலுத்திய முத்திரை வரி ரூ. 22,500/- மேலும் பெறுவனவுகள் மீது செலுத்திய முத்திரை வரி ரூ. 8,000/-.

**<u>குறிப்பு 2 – விற்பனை விநியோகச் செலவுகள்</u> :**

| | | **ரூ.** |
|---|---|---|
| விளம்பரச் செலவுகள் | (குறிப்பு 2.1) | 275,000 |
| அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | (குறிப்பு 2.2) | 97,125 |
| | | **372,125** |

**குறிப்பு 2.1 – விளம்பரச் செலவுகள் :**

விளம்பரச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் :

| | **ரூ.** |
|---|---|
| வெளிநாட்டு ஊடகம் | 250,000 |
| உள்நாட்டு ஊடகம் | 25,000 |
| | **275,000** |

**குறிப்பு 2.2 – அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு :**

வருமான விபரக் கூற்றில் கழிக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் விபரங்கள் பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| பண்டா என்ரபிரைசஸ் (வருடத்தில் வகையற்றுப்போன வாடிக்கையாளர்) | 50,000 |
| மிகுதி வருமதியாளரில் 5% ஏற்பாடு | 94,325 |
| முன்னைய வருடத்தில் பதிவழித்து அனுமதிக்கப்பட்டு பின் அறவிடப்பட்ட அறவிடமுடியாக் கடன் | (47,200) |
| | **97,125** |

**<u>குறிப்பு 3 – நிதி மற்றும் ஏனைய செலவுகள்</u> :**

| | | ரூ. |
|---|---|---|
| குத்தகை வட்டி | (குறிப்பு 3.1) | 15,200 |
| வங்கி அறவீடுகள் | | 8,500 |
| | | **23,700** |

**குறிப்பு 3.1 – குத்தகை வட்டி**

2013 மே 01 ஆம் திகதி நிழற்பட நகல் இயந்திரம் ஒன்று நிதிக் குத்தகை உடன்படிக்கை மூலம் 36 மாத காலத்திற்கு பெறப்பட்டது. குத்தகை மாதத் தவணைப் பணம் வட்டியுடன் சேர்த்து ரூ. 5,800/- இவ்வருடத்தில் 11 தவணைப் பணம் செலுத்தப்பட்டுள்ளது.

**<u>குறிப்பு 4 – ஏனைய பொருத்தமான தகவல்கள்</u> :**

(1) 2009/10 வருடத்தில் கையகப்படுத்திய இயந்திரம் ஒன்று 2013 யூன் 15 இல் ரூ. 120,000/-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதன் கிரயம் ரூ. 450,000/- கணக்கீட்டுத் தேவைக்காக அது முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

(2) வரிமதிப்பீட்டு ஆண்டில் வரித் தேவைக்கான தேய்மான விடுதொகை (depreciation allowance) ரூ. 426,500/-.

(3) வரி மதிப்பீட்டு ஆண்டு 2012/13 இல் இருந்து முன்கொணரப்பட்ட நட்டத் தொகை (வரித் தேவைக்காக) ரூ. 3,223,500/- ஆக கம்பனிக்கு இருந்தது.

(4) கம்பனியின் இலாபத்திலிருந்து 2013 ஆகஸ்ட் 15 இல் பங்கு இலாபமாக ரூ. 250,000/- கம்பனி வழங்கியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2013/14 வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான பின்வருவனவற்றை மதிப்பீடு செய்தல் :

(a) மொத்த நியதிச்சட்ட வருமானம்,

(b) வரி மதிப்பீட்டு வருமானம்

(c) வரி விதிக்கத்தக்க வருமானம்.

(d) வரி விதிக்கத்தக்க வருமானத்தின் மீது செலுத்த வேண்டிய மொத்த வரி.

(e) வழங்கிய பங்கிலாபம் மீது செலுத்த வேண்டிய வரி.

(f) செலுத்த வேண்டிய மீதி வரி.

*(முன்கொண்டு செல்லக்கூடிய ஏதேனும் தொகைகளை தெளிவாகக் குறிப்பிடவும்.)*

(25 புள்ளிகள்)

*பகுதி D முடிவடைந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |